Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 179

வியாழக்கிழமை
23 மே 2024

வைகாசி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## முச்சந்தி முரளி



"என்ன சொன்னாலும் உந்தப் பொலிஸ்காரருக்கு எல்லாமே புறக்குடத்து தண்ணிதான் பாருங்கோ"

# நினைவேந்தல்களை பொலிஸார் தடுக்கக்கூடாது

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, மே 23

அமைதியான முறையில் மேற்கொள்ளும் நினைவேந்தல்களைத் தடுக்கும் வகையில் நீதிமன்ற உத்தரவு பெறுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

11



## சட்டங்களால் பயனில்லை!

### கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, மே 23

எத்தனை சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் நாட்டில் அவை முறையாகச் செயற்படுத்தப்படுவதில்லை. அரசாங்கத்துக்கு விரோதமானவர்களுக்கு எதிராக மட்டுமே சில ஆண்டுகளாகச் சட்டம் நிலைநாட்டப்படுகின்றது.

11

## பொதி மூலம் ஹெரோய்ன் பெண் உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிய பொதிகளில் சூட்சுமாக மறைக்கப்பட்டிருந்த ஹெரோய்ன் போதைப்பொருள் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம், பொம்மைவெளி மற்றும் கொழும்பைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11

## இந்திய மீனவர் அத்துமீறல்; ரணில் கள்ள மௌனம்!

### வடக்கு மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 23

இலங்கை - இந்திய மீனவர் விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மௌனமாக இருக்கின்றார். இது எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்று அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பு நடத்திய அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் அ.அன்னராசா தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாகக் காணப்படும் இந்திய மீனவர் அத்துமீறல் பிரச்சினைக்கு

11

## கடலில் தவறி வீழ்ந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 23

கடற்றொழிலுக்குச் சென்றவர் கட்டுமரத்தில் இருந்து தவறிக் கடலில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அல்லைப்பிட்டியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை றோமன் மெய்ன்ரன் (வயது-58) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## செப்ரெம்பர் 15 இல் புலமைப்பரிசில்!

கொழும்பு, மே 23

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் நேற்றுப் புதன்கிழமை அறிவித்துள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 14 ஆம் திகதிவரை இணையவழி ஊடாகச் சமர்ப்பிக்கமுடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-66)

## பொலிஸ் உத்தியோகத்தர் வாள் கொண்டு தாக்குதல்

### இருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், மே 23

காயங்களுக்கு இலக்கான இரு இளைஞர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர் மேற்கொண்ட வாள்வெட்டிலேயே காயமடைந்தனர் என்று அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை, தொல்புரத்தில் நடந்துள்

11

## வங்காலையில் உள்வாங்கிய கடல்

மன்னார், மே 23

மன்னார், வங்காலை வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் நேற்று மதியம் கடல் நீர் திடீரென உள்வாங்கியது. திடீரென கடல்நீர் உள்வாங்கியதால் மக்கள் அச்சத்துக்குள்ளாகினர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது என்று அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ-எ-56)

## பிரச்சினைக்குத் தீர்வு வழங்காது ரணில் யாழ். வருவது துரோகம்!

### பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சீற்றம்

யாழ்ப்பாணம், மே 23

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஊழியர்களுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை. போராட்டத்தால் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பான கரிசனை ஏதுமின்றி, பல்கலைக்கழக மருத்துவபீடமொன்றின் திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி ரணில் வருகின்றமை எமக்குச் செய்யும் துரோகமாகும் - இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையில் பேசுகின்றோம், திறைசேரியில் பேசுகின்றோம் என்று எமக்குக் கூறப்படுகின்றது. ஆனால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ, உயர் கல்வி அமைச்சோ எமக்குத் தீர்வை வழங்கவில்லை.

2015 ஆம் ஆண்டிலிருந்து

11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தற்கொலைத் தாக்குதல் இந்தியாவில் திட்டம்

## விசாரணையில் தகவல்

கொழும்பு, மே 23

இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் இலங்கையர் நால்வரும் இந்தியாவில் தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்குத் தயார் நிலையில் இருந்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளதாக குஜராத் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நால்வரும் பாகிஸ்தானில் உள்ள 'அபு' எனும் நபருடன் சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும், அந்த நபர் இவர்களை இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்கு ஊக்குவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், இவர்கள் ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் தலைவர்களுடன் மின்னஞ்சல் மூலமாக தொடர்கொண்டிருந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பிற்கு முன்னதாக தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் உறுப்பினர்களாக செயற்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# ஏன் அஞ்சுகிறது ஜே.வி.பி.?



கொழும்பு, மே 23

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார சபையுடன் விவாதம் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயங்குவது ஏன், பொறுப்பை கைவிட் டுவிட்டு கோத்தா ஓடியதுபோலவே விவாத விடயத்தில் அநுர தரப்பு செயற்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருடன் ஜூன் 6 ஆம் திகதி விவாதம் நடத்துவதற்கு அநுரகுமார திஸாநாயக்க தயார் என தேசிய மக்கள் சக்தி அறிவித்தது. எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார சபையுடன் விவாதம் நடத்துவதற்கு திகதி வழங்கவில்லை. இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'போர்க் களத்தில் முதலில் தளபதிகள் இறங்குவதில்லை, சிப்பாய்களே முன்னோக்கி செல்வார்கள், எனவே, இரு கட்சிகளின் பொருளாதா குழுக்கள் விவாதம் நடத்த வேண்டும், அதன்பின்னரே தலைமைகள் நடத்த வேண்டும். ஆனால் தலைமைத்துவ விவாதத்துக்கு மாத்திரம் நாளை வழங்கிவிட்டு, பொருளாதாரக் குழுவுக்கு வழங்காமல் தேசிய மக்கள் சக்தி ஓடி ஒளிகின்றது' எனவும் மரிக்கார் குறிப்பிட்டுள்ளார். (ஓ-44)

# மின்கட்டணத் திருத்தம் சமர்ப்பிப்பதில் தாமதம்

கொழும்பு, மே 23

மின் கட்டண திருத்த யோசனையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிப்பதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் மழையால் நீர் மின் உற்பத்தி தொடர்பான சரியான தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காரணமாக இந்தத் தாமதம் ஏற்படுவதாக இலங்கை மின்சார சபை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு, மின்சாரக் கட்டண திருத்த யோசனை உடனடியாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சாரசபை தெரிவித்தது. (ச-இ)

# துஷ்பிரயோகம்; பொலிஸ் கைது

கொழும்பு, மே 23

பொலிஸ் சிறுவர் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரிந்த பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பிங்கிரிய பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

# கொக்கெய்னை எடுத்துவந்த வெளிநாட்டுப் பெண் கைது

கொழும்பு, மே 23

200 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டு வந்த வெளிநாட்டுப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். பிலிப்பைன்ஸ் நாட்டு பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் எத்தியோப்பியாவில் கொக்கெய்னுடன் தனது பயணத்தைத் தொடங்கி கட்டார் வந்தடைந்து அங்கிருந்து இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த பெண் மசாலா பொருள்கள் அடங்கிய பொதிகளில் 2 கிலோ 861 கிராம் எடையுள்ள இந்த கொக்கெய்ன் போதைப்பொருளை மறைத்து எடுத்து வந்துள்ளா

கைதுசெய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# ஐ. ம. ச. உறுப்பினர் 'யானைக்கு' தாவல்

கொழும்பு, மே 23

ஐக்கிய மக்கள் சக்தி அம்பாந்தோட்டை மாவட்டம் முல்கிரிகல தொகுதி அமைப்பாளராகச் செயற்பட்டு வந்த நிமல் பிரேன் சிஸ்கே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துகொண்டுள்ளார்.

ஐ.தே.க.கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன அவருக்கான கட்சி உறுப்புரிமையைக் கையளித்தார். (ச-இ)

# ரயில் தடம்புரள்வு

கொழும்பு, மே 23

பொத்துஹெர மற்றும் பொல்கஹவெல ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில் ஒன்று தடம்புரண்டுள்ளது.

குருநாகலிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் ஒன்றே தடம் புரண்டுள்ளது. இதனால், வடக்கு ரயில் மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கொழும்பில் 2 நாள்களில் 20 மரங்கள் முறிவு

கொழும்பு, மே 23

கொழும்பு நகர எல்லையில் கடந்த இரண்டு நாள்களில் சுமார் 20 மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு நகர எல்லையில் சுமார் 200 ஆபத்தான மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் இதுவரை 100 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனமழை மற்றும் காற்று காரணமாக, மரங்கள் வீழ்ந்து முறிவது அதிகரித்துள்ளது. (ச-இ)

# சாதாரண தரப் பாடத்தில் தொழிற்கல்வி அறிமுகம்

## சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் தகவல்



கொழும்பு, மே 23

சமூக வலுவூட்டலுக்காக கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு திறன் விருத்தி மற்றும் தொழிற்கல்வியை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக வலுவூட்டலுக்காக கல்வி முறையில் மாற்றம் வரவேண்டும். அதன்படி, க. பொ.த சாதாரணதரப் பரீட்சையின் பாடத்திட்டத்தில் திறன்விருத்தி மற்றும் தொழிற்கல்வி பாடங்கள் உள்ளடக்கப்படவுள்ளன. இந்த தீர்மானத்தை அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அனைவரும் தொழில் கல்வியையும் பெற வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லிணக்கம் உருவாக சர்வதேசம் உதவவில்லை

மனோ சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 23

**அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல் ஆகிய இரண்டு விடயங்களிலும் எவ்வித அர்த்தபூர்வ முன்நகர்வும் அரசாங்கத் தரப்பால் முன்னெடுக்கப்படாததனால் நாட்டில் நல்லிணக்கம் இன்னமும் சாத்தியம் ஆகவில்லை. இவை வெகு தூரம் இழுபட்டுச் செல்வதற்கு சர்வதேச சமூகமும் காரணமாக அமைந்துள்ளது.**

- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன், சுவிற்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வோல்ட்டடனான சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மலையகத் தமிழ் மக்கள் இந் நாட்டில், இந்நாள் வரை இழந்த அரசியல் சமூக உரிமைகளை மீளப்பெற சுவிற்சர்லாந்து எமக்கு உதவவேண்டும். சுவிற்சர்லாந்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வு அனுபவங்களை இலங்கை அரசுக்குப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

இலங்கை தொடர்பான இதுவரையிலான உலக சமுதாய கொள்கைகளை மீளாய்வு செய்யுங்கள் - என்றார். (ச-இ)

# சாரதி கைது!

யாழ்ப்பாணம், மே 23

அனுமதிப் பத்திர நடைமுறைகளை மீறி மணல் ஏற்றிச் சென்ற சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரின் டிப்பரும் சாவகச்சேரி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் டிப்பர் வாகனத்தை வழிமறித்து சோதனை செய்தனர். இதன்போது அனுமதிப் பத்திர நடைமுறைகளை மீறியிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து டிப்பர் வாகனத்தின் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஓ-125)

# போதைமாத்திரை; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், மே 23

அளவெட்டியில் 10 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் இளைஞனை கைது செய்துள்ளதாக காங்கேசன் துறை குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-23)




# வீதியில் இறங்கி யானை அட்டகாசம்

மன்னார், மே 23

மதவாச்சி பிரதான வீதி, முருங்கனில் காட்டு யானை ஒன்று திடீரென வீதிக்கு வந்தமையால் சிறிது நேரம் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் நேற்றுப்புதன்கிழமை இடம்பெற்றது. முருங்கன் பண்ணையின் சுற்று வேலியை உடைத்துக் கொண்டு வெளியேறிய யானை பிரதான வீதியைக் கடந்து, காட்டுப் பகுதிக்குள் சென்றது.

கடந்த சில நாள்களாக மதவாச்சி பிரதான வீதியில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் மக்களை அவதானமாகப் பயணிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (25-56)



# யாழில் பாணுக்குள் கண்ணாடித்துண்டு

யாழ்ப்பாணம், மே 23

கடையில் வாங்கிய பாணுக்குள் கண்ணாடித் துண்டைப் பார்த்து நுகர்வோர் அதிர்ச்சியடைந்துள்ளார்.

மருதனார்மடத்திலுள்ள கடையொன்றில் நேற்றுமுன்தினம் வாங்கிய பாணிலேயே கண்ணாடித் துண்டு காணப்பட்டுள்ளது.

சுன்னாகத்திலுள்ள வெதுப்பகத்திலிருந்தே மேற்படி கடைக்கு வெதுப்பக உற்பத்திப் பொருள்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-66-125)

# தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு

சாவகச்சேரி, மே 23

தவறான முடிவெடுத்து குடும்பத் தலைவர் ஒருவர் உயிர் மாய்த்துள்ளார். இந்தச் சம்பவம், சரசாலை தெற்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

தவறான முடிவு எடுத்து உயிர் மாய்க்க முற்பட்டபோது உறவினர்கள் அவரைக் காப்பாற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர், அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (25-3)



# தினம் தெரியுமோ?

**ஆக்குகிறவள் சலித்தால் அடுப்புப் பாழ்; குத்துகிறவள் சலித்தால் குந்தாணிபாழ் எண்டொரு பழமொழியை நீங்கள் கேள்விப்பட்டியளோ தெரியாது. எந்த வேலையையும் சலிக்காமல், சிடுசிடுக்காமல், மனம் வைச்சு செய்தால்தான் அது சரியா வரும். ஆனால் இஞ்ச அரசாங்க உத்தியோகத்தில இருக்கிற கனபேர் கதிரையைத் தேய்ச்சு சூடாக்கிறதிலதான் குறியா இருக்கினமே தவிர சனத்தைப் பற்றிக் கவலைப்படுறேலை.**

**இந்தக் கிழமையில மூண்டுநாள் தான் உந்த ஒப்பீஸ் எல்லாம் இயங்கும். இண்டைக்கு வியாழக்கிழமையில இருந்து ஞாயிறுமட்டும் பெரும் லீவு. அதால அவசர வேலையுள்ள சனங்கள் இந்த மூண்டு நாளும் ஆத்தலைஞ்சமாதிரி, தங்கட அலுவலை முடிக்க ஓடித்திரிஞ்சதுகள். நேற்றுத்தான் இந்தக் கிழமையின்ர கடைசி ஒப்பீஸ் நாள். புதன் போனால் கிடையாது பொழுது பட்டால் கிடைக்காது எண்ட நிலைமை. இந்த ரென்சனோட வலிகாமத்தில பஸ் ஸ்ரான்டோட இருக்கிற ஒரு ஏ.ஜி.ஏ. ஒப்பிஸுக்கு சனங்கள் போயிருக்கு.**

**அங்க போன சனத்துக்கு 'நாங்கள் ஏ.ஜி.ஏ. ஒப்பீஸுக்கு வந்திருக்கிறோமோ? இல்லாட்டி பாதை மாறி ஏதும் கலியாண மண்டபத்துக்கு வந்திட்டமோ?' எண்டு ஒரே டவுட். ஏனெண்டால், அங்க நிண்டவை எல்லாரும் கலியாணவீட்டில நிக்கிறமாதிரி பட்டுச் சீலை கட்டி, மேக்கப் கிறீம் எல்லாம் அள்ளியப்பிக் கொண்டு, நகை நட்டுகளை அடுக்கிக்கொண்டு நிண்டிருக்கினம். அவசரமா 'பேர்த் சேர்ட்டிபிக்கெட்' (பிறப்புச் சான்றிதழ்) எடுக்கப்போனவையிட்ட 'இண்டைக்கு இஞ்ச எடுக்கக் கஷ்டம், வேணுமெண்டால் அடுத்த ஏ.ஜி.ஏ ஒப்பீஸில போய் எடுங்கோ. இப்ப எல்லாம் ஒன்லைன் தானே. எங்கையும் எடுக்கலாம்' எண்டு சொல்லிப் போட்டு அவை ஒரு கலியாண வீட்டுக்குப் போற அலுவலிலையே கண்ணும்கருத்துமா இருந்திருக்கினம். அடுத்த பிரதேசத்து ஏ.ஜி. ஏ. ஒப்பீஸுக்கு போறதெண்டால் இன்னொரு பஸ் எடுக்கோணும். அப்பிடி எடுத்துப் போனாலும் அங்கையும் ஏதும் சாமத்தியவீடு, அந்தியேட்டி எண்டு அவையும் வெளிக்கிட்டா என்ன செய்யிறது எண்டு சனத்துக்கு யோசினை.**

**இப்பிடி யோசிச்சோ என்னவோ, அங்க போன அம்மா ஒராளுக்கு அவசரமா பாத்ரூம் போகவேண்டி வந்திட்டு. அவா அடிச்சுப்பிடிச்சுக்கொண்டு அந்த ஒப்பீஸில உள்ள பொதுவான பாத்ரூமுக்கு போனால், வாசலிலதிக்குப்பாலகர்மாதிரிரண்டு பொம்பிளையள் நிண்டு கொண்டு'அம்மா இஞ்சையெல்லாம் நீங்கள் போகக் கூடாது'எண்டு மறிச்சு திருப்பி அனுப்பிட்டினம். பாவம் அந்த அம்மா, தான் போன அவசரத்தோட சேர்ந்து வந்த 'ஆத்திரத்தையும்' அடக்கிக் கொண்டு வந்திட்டா. பிறகு பார்த்தால் அந்த பாத்ரூமுக்க தானாம் மேக்கப் நடந்திருக்கு. அதுக்க மேக்கப் போட்டு முடிச்சுக்கொண்டு சிலர் வந்திருக்கினம். அவை மேக்கப் போடுறதுக்காக சனங்கள் ஐம்புலனையும் அடக்க வேணுமாம். ஒப்பீஸில வேலை செய்யிற ஒராளுக்கு கலியாணம், கச்சேரி எண்டால் போகத்தான் வேணும். அதுக்குத்தானே அவைக்கு லஞ்ச் ரைம் இருக்கு. மத்தியானம் ஒரு மணித்தியாலம் எல்லாரும் போட்டு, திரும்பி வந்தால் ஒரு பிரச்சினையுமில்லையே. எல்லாம் மேய்க்கிறவையைச் சொல்லோணும், மேய்க்கிறவை ஒழுங்கா இருந்தால் மந்தைகள் தறிகெட்டுப் போகாது கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அனுகூலம் உண்டாகும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால்ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முருகப் பெருமானை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். இன்று தட்சிணாமூர்த்தியை வழிபட தடைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை தொடங்கவும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கன்னி:** செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். மனக்கசப்புகள் நீங்கும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. பணியாளர்கள் உற்சாகம் காட்டுவார்கள். மகாலட்சுமி வழிபாடு நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும்.

**துலாம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். மரியாதை அதிகரிக்கும். அம்பிகையை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் இழுபறியாகும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும்.

**தனுசு:** பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படும். பொறுமை அவசியம். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

# தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 23

திருமூலர் தம்பிரான் அடிகளாருக்கு டென்மார்க் முருகன் ஆலயத்தில் நடந்த இழிவான, மிலேச்சத்தனமான அசம்பாவிதத்துக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாக இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது தாய்மொழியில் இறைவனுக்குப் பூசை செய்தால் தவறா? இந்த நடவடிக்கையை சந்நிதானத்தில் செய்த நபருக்கு இறைவன் தண்டனை கிடைத்தே ஆகும்.

இருந்தும் உரியவர் கண்டறியப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனைக்கு உட்படுத்தவேண்டும். சுவாமிகள் விரைவில் குணமடையச் சிவப் பரம்பொருளைப் பிரார்த்தனை செய்கின்றோம்- என்றுள்ளது. (ஓ-66)

# பூசகரிடம் கொள்ளை: நகை மீட்பு!

யாழ்ப்பாணம், மே 23

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பூசகரிடம் கொள்ளையடிக்கப்பட்ட ஒன்றரைப் பவுண் தங்க நகை நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் சங்கத்தானையை சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவருக்குப் பொலிஸாரால் வலைவீசப்பட்டு வருகிறது.

பூசகரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகையை உருக்கியவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி யூட்சன் உத்தரவிட்டார். (ஒ-27)

# பேருந்து மோதி மாணவி சாவு!

கொழும்பு, மே 23

கம்பளை- குருந்துவத்தையில் நேற்றுக் காலை தனியார் பேருந்து மோதியதில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மல்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமியே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சிறுமி பேருந்தில் இருந்து இறங்கி பேருந்துக்கு முன்னாலுள்ள வீதியைக் கடந்தபோது இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பில் பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# நாடு திரும்பியவரை காணவில்லை!



வவுனியா, மே 23

சவுதி அரேபியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவரைக் காணவில்லை என்று கொழும்பு விமான நிலைய பொலிஸ் நிலையத்திலும் வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா கணேசபுரம் காத்தான்கோட்டத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான யோ.ரகுபரன் (வயது - 33) என்பவரையே காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வருவது தொடர்பில் மனைவியிடம் சொல்லாது இலங்கையை வந்தடைந்துள்ளார். கடந்த 16ஆம் திகதி மதியம் ஒரு மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர் தொடர்பை மேற்கொண்டு இலங்கை வந்துவிட்டேன். வீட்டுக்கு வாகனத்தில் வருகை தருகின்றேன் என மனைவியுடனும் பிள்ளையுடனும் கதைத்துள்ளார்.

சில மணித்தியாலங்களின் பின்னர் கணவனது தொலைபேசி தொடர்புகள் அற்றுப்போன நிலையில் குடும்பத்தினர், உறவினர்கள் தேடிய பொழுதும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை. இதனையடுத்து 18ஆம் திகதி கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் நிலையத்திலும் 19ஆம் திகதி வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டை வழங்கியுள்ளனர். இவரைக் கண்டவர்கள் உடனடியாக 0742678538, 0776310435 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-125)

# 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், மே 23

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பத்தொன்பதாவது நிகழ்வுகள், பிரபல பட்டிமன்றப் பேச்சாளரும் பாரி அறக்கட்டளையின் தலைவருமான ச.நிகேஸ் தலைமையில் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ச்சியாக 3 நாள்கள் நடைபெறவுள்ளன.

'ஈழத்து நூல்களை அறிவோம்' என்ற தலைப்பிலான நூல் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வு, பாரி அறக்கட்டளை நிறுவுநர் அமரர் நடராசா விமலரஞ்சிதன் நினைவு அரங்கில், விழாவின் இரண்டாம் நாள் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வட்டக்கச்சி வினோத்தின் 'வேர்கள் வான் நோக்கின்' கவிதைத் தொகுப்பு பற்றி எழுத்தாளர் அராலியூர் நிலாவும், நிலவனின் 'நாளைக்கு மழை பெய்தது' கவிதைத் தொகுப்பு பற்றி பட்டிமன்றப் பேச்சாளரும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருமான ஆர். ரவிராஜ்யும், மு. அநாதரட்சகனின் 'பின் தொடரும் வலி' சிறுகதைத் தொகுதி பற்றி கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரனும் உரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு சன் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் 'முட்டை', 'அரோகரா' ஆகிய நாடகங்களும் இடம்பெறவுள்ளன.

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் கல்லூரி மண்டபத்தில் மூன்று தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. முற்றிலும் இலவசமாக இடம்பெறும் நிகழ்வுகளில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர். (25)

# ஆசிரியருக்கான கடிதம்

2019 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய், குருநகர் பிரதேசங்களில் உள்ள சுமார் 87 குடும்பங்கள் கல்லுண்டாய் பிரதேசத்துக்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். பிரதேச மக்கள் அடிப்படை வசதிகளின்றி அதிக துன்பத்தை தினம் தினம் எதிர்கொள்கின்றனர். குப்பைகளை உரமாக்கும் நிறுவனம் காணப்படுவதால் சுவாச நோய்கள் ஏற்படுகின்றது. கடல் நீர்மட்டம் உயர்வடையும்போது நீர் வீடுகளுக்குள் உட்புகுகின்றது. போக்குவரத்து வசதி இல்லை. இவ்வாறான பிரச்சினைகள் காணப்பட்டாலும் தலையாயப் பிரச்சினையாக தண்ணீர்ப் பிரச்சினை காணப்படுகின்றது.

தொடக்கத்தில் இலவசமாகக் கொடுக்கப்பட்ட தண்ணீர் இன்று பணம் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை 7 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர்வண்டி வருவதால் அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் மக்கள் அவதியுறுகின்றனர். இதற்கான தீர்வை யார் எடுப்பது?

பாதிக்கப்பட்ட மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# நீர்த்துப்போகுமா நீதிப்பொறிமுறை?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இரா.சம்பந்தன் கூறியதாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்துகள் முக்கியமானவை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில், நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுகளின் அறிக்கையில் சொல்லப்பட்ட 'தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் சுயாட்சி அதிகாரம் வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசும் - புலிகளும் ஆராய்வர்' என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஒஸ்லோ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை விடக் குறைந்த அரசியல் தீர்வுக்கு இணங்கமுடியாது என்பதால் தமிழ்ப்பொதுவேட்பாளர் யோசனையை எதிர்ப்பதாக இரா.சம்பந்தன் குறிப்பிட்டார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார். இங்கே, சம்பந்தன் - சுமந்திரன் இணை மஹிந்த ராஜபக்ச காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறிலங்கா அரசாங்கத்துடனான பேச்சுகளாகட்டும் சரி, அதன் பின்னர் நல்லாட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சிகளாகட்டும் சரி ஒஸ்லோ அறிக்கை தொடர்பில் மூச்சே காட்டவில்லை என்பது முக்கியமானது.

சம்பந்தன் சொன்னதாகத் தெரிவித்து சுமந்திரன் முன்வைத்த இந்தக் கருத்துகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டபோது, தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாடுகளை பொதுவெளியில் வெளிப்படுத்தியிருந்த சிறீதரன், பதிலடியாக, ஒஸ்லோ அறிக்கையை முன்வைக்கும்போது எந்த ஜனாதிபதி வேட்பாளர் அதை ஏற்றுக்கொள்கின்றாரோ அவரை ஆதரிக்கலாம் என்று குறிப்பிட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அரசியல் தீர்வு முயற்சிக்கான முக்கியமான மைல்கல்லாக அதைப் பார்க்கமுடியும் என்றபோதும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சம்பந்தன் - சுமந்திரன் இணை திட்டமிட்ட ரீதியில் நீதிக்கான தேடலை நீர்த்துப்போகச் செய்ய முற்படுகின்றதா அதற்கு தமிழ் அரசுக் கட்சியும் உடந்தையாகச் செயற்படுகின்றதா என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்கமுடியவில்லை.

*2009* ஆம் ஆண்டு போரின்போதான அழிவுகளை ஒட்டுமொத்த தமிழர் தரப்பும் இனப்படுகொலை என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்தி அந்த இனப்படுகொலைக்கான நீதியைத் தேடுவதன் ஊடாக அரசியல் தீர்வைப் பெறுவதற்கு விரும்புகின்றன. சிறிலங்கா அரசாங்கம் காலாதிகாலமாக தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைப் புரிந்து வந்தது. அது முள்ளிவாய்க்காலில் உச்சம்பெற்றிருந்தது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதியை நிலைநாட்டுவதன் ஊடாக எதிர்காலத்தில் சிறிலங்கா அரசாங்கத்தால் தம் மீது இனப்படுகொலையை நிகழ்த்த முடியாதளவுக்கு உறுதியான அரசியல் தீர்வை எட்டலாம் என்று தமிழ்மக்கள் நம்புகின்றார்கள். ஆனால் சம்பந்தன் - சுமந்திரன் இணையைப் பொறுத்தவரையில் ஆரம்பத்திலிருந்து நீதியை நிலைநாட்டும் விடயத்தில் விட்டேத்தியாகவே செயற்படுகின்றனர். தென்னிலங்கைத் தலைவர்களையும், இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட இலங்கை விவகாரத்தில் தலையிடும் தூதரகங்களையும் திருப்திப்படுத்தும் விதத்திலேயே நீதிப்பொறிமுறையை இதுவரை கையாண்டிருக்கின்றனர். அதை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் தான் அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்தன. இப்போதும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின்' நீதிக்கான கோரிக்கையைப் புறந்தள்ளி தனித்து அரசியல் தீர்வுக்கான நிலைப்பாட்டை மாத்திரம் முன்வைப்பது என்பது பிற்போக்குத்தனமானது?

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்களத் தலைவர்களிடம், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு தமிழ் மக்கள் கோரும் சர்வதேச விசாரணையை நடத்த ஒத்துழைக்கவேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தால் அவர்கள் எவரும் ஏற்கமாட்டார்கள். அப்படியொரு நிலைமை வந்த பின்னர் எப்படி அவர்களை ஆதரிக்க முடியும்? தமிழ்ப் பொதுவேட்பாளரைத்தான் ஆதரித்தேயாகவேண்டிவரும். இதனால்தான் சம்பந்தன் - சுமந்திரன் இணை நாசூக்காக நீதிக்கான பயணத்தை தவிர்த்திருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியினராவது இவற்றைப் புரிந்து கொண்டு சமயோசிதமாக முடிவு எடுக்கவேண்டும்.




# பசுக்களிடையே அம்மை நோய்!

## குறைவடையும் பால் உற்பத்தி

**கொழும்பு, மே 23**

**நுவரெலியா மாவட்டத்தில் கால்நடைப் பண்ணையாளர்களால் வளர்க்கப்படும் பசு மாடுகளுக்கு அம்மை நோய் வேகமாகப் பரவி வரும் நிலையில், பல கால்நடைகள் உயிரிழந்துள்ளன என்று கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.**

உள்நாட்டு திரவப் பால் உற்பத்தியில் சுமார் 33 வீதம் மத்திய மாகாணத்திலிருந்து பெறப்படுகிறது. இதில் 12 வீதம் நுவரெலியா மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெறுகிறது இந்த நிலையில், கால்நடைகளிடையே அம்மை நோய் பரவி வருவதன் காரணமாக நாளாந்த பால் உற்பத்தி குறைவடைந்துள்ளது.

அத்துடன், பசு மாடுகளுக்கு பரவும் அம்மை நோயைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசி சுகாதார அமைச்சிடம் இல்லாததன் காரணமாக நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தமுடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பணவீக்கம் ஏப்ரலில் உயர்வு!

கொழும்பு, மே 23

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கமைய, நாட்டின் மொத்தப் பணவீக்கம் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பதிவான 2.5 வீதத்திலிருந்து 2024 ஏப்ரலில் 2.7 வீதமாக அதிகரித்துள்ளது என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)

# உயிரிழந்த ரைசியை ஹிட்லர் என வர்ணிப்பு

## ஐ.நா.வில் சர்ச்சை

நியூயோர்க், மே 23

உலங்குவானூர்தி விபத்தில் உயிரிழந்த ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி ஐ.நா.வில் செலுத்தப்பட்டது. இதன்போது இஸ்ரேலியப் பிரதிநிதி, நீங்கள் ஹிட்லருக்கு அஞ்சலி செலுத்துகின்றீர்கள். இஸ்ரேலிலும், ஈரானிலும் பல ஆயிரக்கணக்கானோரைக் கொலை செய்தவருக்கு அஞ்சலி செலுத்துகின்றீர்கள் எனக் குறிப்பிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார். (ஒ-6)

# பிரிக்ஸில் இலங்கை!

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளின் ஆங்கில முதல் எழுத்துகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ள 'பிரிக்ஸ்' என்ற அரசாங்கங்களுக்கு இடையிலான அமைப்பில் சேர விரும்பும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைந்துள்ளது. (ச)



# நாட்டைச் சீர்குலைக்கும் வாக்குறுதியை வழங்காதீர்

## பதில் நிதியமைச்சர் சுட்டிக்காட்டு

கோத்தாபய ராஜபக்ச வரி குறைப்புச் செய்ததால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சியினரே தமது அரசாங்கத்தில் வரி குறைப்பு செய்வதாகக் குறிப்பிடுவது வேடிக்கையானது. அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார். வரிக் கொள்கை முறையாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளதால் நாட்டின் பொருளாதாரம் தற்போதுஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக வரிக் கொள்கைகளைத் திருத்தம் செய்தால் நாடு மீண்டும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

24.05.2024

**வெள்ளிக்கிழமை**

**வைகாசி - 11**

சுபநேரம் : 05.52 - 07.22

ராகுகாலம் : 10.22 - 11.52

**நாளொரு நல்வார்த்தை**

**அனுபவம் என்பது**
**பெரிதாக ஒன்றுமில்லை**
**எல்லாவற்றையும் இழந்த பிறகு**
**எஞ்சி நிற்பதே!**

**-கண்ணதாசன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மக்லியோட்டுக்கு சர்வதேச விருது

யாழ்ப்பாணம், மே 23

வட மாகாணத்தில் சிறந்த முறையில் கருவள சிகிச்சையை முன்னெடுக்கும் மருத்துவமனையாக குழந்தை சத்திரசிகிச்சை மருத்துவ நிபுணர் பா.சயந்தனால் நிர்வகிக்கப்பட்டுவரும், இணுவில் மக்லியோட் மருத்துவமனை தெரிவாகி சர்வதேச விருதைப் பெற்றுள்ளது. கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

'BWIO' என்ற அமெரிக்க அமைப்பால் விருதுவழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-25-20-125)



## வற்றாப்பளைக்குச் சென்ற பேருந்து தடம் புரண்டது

பண்டத்தரிப்பு சாந்தையிலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்குச் சென்று விட்டு திரும்பிய பக்தர்கள் பயணித்த பேருந்து தடம்புரண்டது. பேருந்தில் பயணித்தவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பக்தர்கள் ஒன்று சேர்ந்து பேருந்தை வாடகைக்கு அமர்த்தி வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் சென்று விட்டு யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுமுன்தினம் காலை வந்துகொண்டிருந்தனர். பேருந்து பூநகரிப் பாலத்தைக் கடந்து பயணித்துக் கொண்டிருந்த போது தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. பேருந்தில் பயணித்த ஆறு பயணிகள் படுகாயம் அடைந்து பூநகரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஒ-27)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப் பழனி முருகன் ஆலயக் குரோதி வருட மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. (ப-66)



## விசேட சந்திப்பு

மன்னார், மே 23

தேசிய மக்கள் சக்திக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினருக்கும், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளாருக்கும் இடையே விசேட சந்திப்பு, மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. (ப-56)

## தமிழ்ப் பொதுவேட்பாளர்: சமகால அரசியல் உரையாடல்

யாழ்ப்பாணம், மே 23

முழுநிலா நாள் சமகால அரசியல் உரையாடல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் 'தமிழ்ப் பொது வேட்பாளர் அரசியல்' எனும் பிரதான தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அரசறிவியல் சிறப்புக்கலை மாணவி செல்வி ம.கிருத்திகா 'கருத்தியல் ரீதியில் தமிழ்ப் பொதுவேட்பாளர்' எனும் தலைப்பிலும், அரசறிவியல் சிறப்புக்கலை மாணவி செல்வி.ஜீ.டிலக்சனா 'தமிழ்ப் பொதுவேட்பாளரும் நடைமுறையும்' எனும் தலைப்பிலும் உரையாடவுள்ளனர்.

இந்த உரையாடல் நிகழ்வில் இணைந்து கொள்வதற்கான Meeting ID: 952 8772 1180, Passcode: Poyaday@05 என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-66)

## சுன்னாகம் சந்தையின் ஒரு பகுதி புனரமைப்பு

சுன்னாகம், மே 23

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் பொதுச் சந்தையின் ஒரு பகுதி உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட நிதியின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பணிகளை வலி.தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன், வலி.தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி வி.கௌரி, தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேரடியாகப் பார்வையிட்டுள்ளனர். (ப-66)



## அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலைக்கு புதிய பெண் அதிபர் பஸ்மி

மன்னார், மே 23

அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலையின் புதிய அதிபராக மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி பஸ்மி உத்தியோகபூர்வமாக அதிபர் பதவியை கடந்த திங்கட்கிழமை காலை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நிகழ்வில் மன்னார் உப்புக்குளம் மூர் வீதி கிராமத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-213)

## மின் தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு, மே 23

முந்தல - பரலங்காட்டுவ பிரதேசத்திலுள்ள தனது கால் நடைப் பண்ணையில் மின் சாரத் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த வர்த்தகரொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

பண்ணையின் கதவை சரி செய்துகொண்டிருந்தபோதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 • 03 • 1961

மறைவு 24 • 04 • 2024

கடந்த 24.04.2024 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் சிவபாக்கியம் நாகராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.05.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 483 6809

(CR/42487) J-1

# ஆதன பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -26. நான்காம் குறுக்கு தெரு. 07 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பூரண உதயம் றெஜினாவும். V.A.யேசுதாசனும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தேவசகாயம் இராசரத்தினம் யோசப் ஞானம் யோசப் அவர்கள் 10.01.1968ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு A.அன்ரனி முகதாவில் 63ம் இலக்க சீதன உறுதி மூலம் வைத்தி ஏபிரகாம் யேசுதாசன் பெண் பூரண உதயம் றெஜினா ஜோசப்பிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் வைத்தி ஏபிரகாம் யேசுதாசன் பூரண உதயம் றெஜினா ஜோசப் அவர்கள் 11.09.1983ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு D.இராஜதுரை முகதாவில் 5425ம் இலக்க ஈடு உறுதி மூலம் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர் சேமலாப நிதிக்குழுவின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் ஜெனிற்றா பிறேமளா மத்தியாஸீம். அன்ரனி சீவரட்ணம் அமிர்தநாதனும் பெண் கலிஸ்ரா கௌரியும் தங்கள் அற்றோனித்தத்துவகாரி யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெரு. இல.100ஐச் சேர்ந்த வைதீகவனஜா செல்வரத்தினம் மூலம் வெளிப்பட்டு 02.10.2021ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 13691ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஸ்டில்டா கொன்சி பெலொக்ஸீஸ் றெனாட்டிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். சுண்டிக்குளி கோவிற்பற்று. யாழ்ப்பாண மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம். கிராம அலுவலர் பிரிவு J/72 யாழ்ப்பாண நகரம் 4ம் பிரிவு இறை: Allotment of Land" விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 5. 1/2 இதில் சொரியலாய் 1/3 பங்கும். இதனை மறுபங்காளர்கள் நிந்தப்படுத்திப் பிரிவிட்டு ஆட்சிப்படுத்தியபடி மிகுதி விஸ்தீரணம் நிலப்பரப்பு (0) பூச்சியம் குளி (8.09) எட்டு தசம் பூச்சியம் ஒன்பதும். வீட்டின் பகுதியும் அதற்குச் சேர்ந்தவைகளும். ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் J.மனுவல் அவர்கள் 24.07.1950ம் திகதியில் தயாரித்த 516ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டுள்ளது. **இதன் எல்லை :-**

**கிழக்கு** - நான்காம் குறுக்கு வீதி
வடக்கு - நன்கொடை ஏற்பவரின் ஆதனம்.
மேற்கு - மொகிதீன் அப்துல்காதரின் ஆதனம்.
தெற்கு - எமிலியானஸ் ஜஸ்ரின் பெண் புளோரினாவின் ஆதனம். இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை கிறிஸ்டில்டா கொன்சி பெலொக்ஸீஸ் றெனாட் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப் பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கிறிஸ்டில்டா கொன்சி பெலொக்ஸீஸ் றெனாட் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை.**

(cr 42486 ) (N-1)

# மரண அறிவித்தல்



பிறப்பு • 02 • 05 • 1955

இறப்பு • 21 • 05 • 2024

## திருமதி பத்மாவதி தர்மலிங்கம் (இராசாத்தி)

நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி தர்மலிங்கம் கடந்த (21.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும். நிர்மலராஜன் (UK). சுவிந்தராஜன். விஜயராஜன். றோகினி. ராகினி. கமலராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும். தேவராணி (UK). தவறாஜினி. குணவதனி. நிறஞ்சன். உமாகரன். சாளினி ஆகியோரின் அன்பு மாமியாரும். கவிஷா. நிருஷா. கயுதா. கோகுலன் - சானுகா. பிரதீப். விதுசன். துவாரகன். சதுசன். டிஷானா - கிருபாகரன். திலக்சன் - எமி. தமிழ்வர்ணன். அபிராமி. அபிசா. தவிசன். பிருந்தா. அஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபினாஸ். விகாஸ். மதுசன் ஆகியோரின் அன்பு பூட்டியும். காலஞ்சென்ற வர்களான விமலாதேவி. சிவராசா. பாலசிங்கம். சீவரத்தினம். குணராசா. அன்ன லிங்கம் மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற கார்த்தி கேசு மற்றும் தனலட்சுமி. புனிதராணி. சத்தியதேவி. செல்லம். பாக்கியம். பூபால சிங்கம். மணி. புவனேஸ்வரி. காலஞ்சென்றவர்களான சண்முகநாதன். கமலாதேவி மற்றும் துரைராசா காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம். சின்னராசா ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2024) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் நாவற்குழி மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**நாவற்குழி மேற்கு,**
**கைதடி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**076 1136 695**

(CS 552) A-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 09 • 02 • 1950

மறைவு 03 • 05 • 2024

## அமரர் ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம் (பவா)

**(இளைப்பாறிய பிரதேச சபை செயலாளர்)**

கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.05.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (25.05.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் (614/3, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்) நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**614/3, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 605 7490**

**குடும்பத்தினர்.**

(CS 00555) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டம்

யாழ்ப்பாணம், மே 23

சண்டிலிப்பாயில் 10 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். சண்டிலிப்பாயில் உயிர்கொல்லி போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த நிலையில் 10 உயிர்கொல்லி போதை மாத்திரைகளை கைப்பற்றியதோடு இளைஞரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்திய பொழுது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து அவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பட்டு கடுமையான எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார். (ஒ-125)

## கலைநிலா அரங்கு

யாழ்ப்பாணம், மே 23

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் கலைநிலா அரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணி முதல் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறவுள்ளது. (எ-66)

### காணி விற்பனைக்கு

➤ திருநெல்வேலி கலாசாலை வீதியில் - 2 பரப்பு
➤ ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் 2 பரப்பு

077 703 7058, 077 601 1135

(CS/554) J-1

### வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 494 9683
077 077 6469

### விற்பனைக்கு

தச்சுவேலைக்குப் பயன்படும் பலகை சீவுதல், அரிதல், பொளியடித்தல் மற்றும் வேலைப்பாடு செய்யக்கூடிய தச்சுப் பட்டறை விற்பனைக்குண்டு.

077 111 8413

### தவறவிடப்பட்டுள்ளது

திருநெல்வேலிக்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை (19.05.2024) அன்று சின்னத்துரை கார்த்திகேயன் ஆகிய எனது (198204302185) அடையாள அட்டை தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 481 1590, 077 748 0796

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 24, சப்பல் வீதி, 66 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் C.T.ஜோசுவா பெண் மேரி நல்லம்மா என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இவ்வாதனம் குறித்த ஜோசுவா பெண் மேரி நல்லம்மா எவருக்கும் உரித்துமாற்றம் செய்யாது மரணிக்க மாதாவழி முதுசமாக அவரது பிள்ளைகளான லெஸ்லி ஜோசுவா தர்மராஜ் மற்றும் இயு ஜின் ஜோசுவா சந்திரராஜ் என்பவர்களுக்கு வந்தடைந்தது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-30, சப்பல் வீதியைச் சேர்ந்த லெஸ்லி யோசுவா தர்மராஜ் 17.08.1981ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு ச.செல்வராஜா முகதாவில் 3502ம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் அவரது சகோதரரான இயு ஜின் ஜோசுவா சந்திரராஜ் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தமக்குரித்தானது என இயூஜின் ஜோசுவா சந்திரராஜ் உம் பெண் செபமலர் உம் சேர்ந்து 11.01.2012ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு ராஜ்மோகன் பாலேந்திரா முகதாவில் 560ம் இலக்க பிரகடனப்படுத்தலும், உறுதிப்படுத்தலும் உறுதி மூலம் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-66, சப்பல் வீதியைச் சேர்ந்த தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் இயூஜின் ஜோசுவா சந்திரராஜ் உம் பெண் செபமலர் உம் 11.01.2012ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு ராஜ்மோகன் பாலேந்திரா முகதாவில் 561ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஷாந்த சந்திரராஜ்ற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-66, சப்பல் வீதியைச் சேர்ந்த தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் கிறிஷாந்த சந்திரராஜ், இல-37, மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனது அற்றோணித்தத்துவகாரர் பொன்னுத்துரை கிறிஸ்தோப்பர் மூலம் தோன்றி, 20.06.2019ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2301ம் இலக்க அறுதி உறுதி மூலம், இல-92, 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோசப் முத்தையா ரவீந்திரனுக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாண நகரத்தின் 4ம் பிரிவு, பிரதேச செயலகம்- யாழ்ப்பாணம், கிராமசேவையாளர் J/72, யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சப்பல் வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் "66 ஐக்" கொண்ட ஆதனம் நிலப்பரப்பு (1) ஒன்று குளி (11.08) பதினொன்று தசம் சைபர் எட்டு. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. சுப்பிரமணியம் அவர்களால் 2011.05.20ம் திகதி அளந்து வரைந்த 1715ம் இலக்கப்படத்தில் துண்டு 1.2 எனக்காட்டப்பட்டுள்ளது. இது மீண்டும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் P. தனராஜா அவர்களால் 2019.06.10ம் திகதி அளந்து வரைந்த $3757^{A}$ இலக்கப்படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி நிலப்பரப்பு (1) ஒன்று குளி (9) ஒன்பது. இதன் எல்லைகள்.

கிழக்கு :- சவிரிமுத்து ஞானப்பிரகாசத்தின் ஆதனம்
வடக்கு :- சப்பல் வீதி
மேற்கு :- 2ம் குறுக்குத்தெரு
தெற்கு :- ஜோசப் முத்தையா ரவீந்திரனின் ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது ஜோசப் முத்தையா ரவீந்திரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜோசப் முத்தையா ரவீந்திரன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல தெரிவித்துக்கொள்கிறேன். என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்,
யாழ் மாநகர சபை.

(CR/42485) J-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
10 • 08 • 1940

உதிர்வு
23 • 04 • 2024

அமரர் **நாகலிங்கம் அன்னம்மா**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்


**எமது இல்லத்தில் இன்று 23.05.2024 வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வினை தொடர்ந்து மதிய போசன நிகழ்வினில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.**

**பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.**

குடும்பத்தினர்

(CS/553) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
24 • 07 • 1942

மறைவு
22 • 05 • 2024

### இளையதங்கம் சின்னராசா

கீரிமலையை பிறப்பிடமாகவும் கொழும்பு, அளவெட்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா முத்துப்பிள்ளையின் அன்பு மகளும், கந்தையா செல்லாட்சியின் மருமகளும், சின்னராசாவின் அன்பு மனைவியும் ஆன இளையதங்கம் சின்னராசா நேற்று புதன்கிழமை (2024.05.22) காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அளவெட்டி வடக்கில் உள்ள இல்லத்தில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று ஈமக்கிரியைகளுக்காக மணற்பிட்டி வீரசைவர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
கணவர் - க.சின்னராசா

(CS 557)V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 07 . 1937



மறைவு
22 . 05 . 2024

## திருமதி பரநிருபசிங்கம் ஜெயம்

யாழ். கொட்டடியை பிறப்பிடமாகவும், அராலிமேற்கு, வட்டுமூளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் ஜெயம் (22.05.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (மூளாய்) அவர்களின் பாசமிகு மனைவியும் அமரர் கமலாம்பாள் தில்லையம்பலம் (மலேயன் பென்சனியர்), கணபதிப்பிள்ளை திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருள்ராஜன் (ஓய்வுநிலை ஊழியர் தபாலகம் வட்டுக்கோட்டை), ஸ்ரீதரன் (ஆட்டோஸ்ரீ மாவடி), அமரர் தேவகுமார் (தேவா சக்தி F.M) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தநாயகி (தொல்புரம் விக்கினேஸ்வரா ஆசிரியை) பரமானந்தவல்லி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்சிகன் (ஆசிரியமாணவன் கல்வியியற்கல்லூரி கோப்பாய்), கௌசிகன், பானுஜா, தர்சினி, தர்மினி, ஆகியோரின் பாசத்துக்குரிய பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


"மாவடி"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்
077 271 9829

(CR 42488) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 09 . 1960



மறைவு
22 . 05 . 2024

## இராஜதுரை இரட்னேஸ்வரன்

**(உரிமையாளர், பிள்ளையார் இன்/ பிள்ளையார் ஸ்ரோர்ஸ்)**

இல - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அன்டர்சன் தொடர்மாடி (Anderson Flats), கொழும்பு 05, மற்றும் மேற்கூறப்பட்ட யாழ்ப்பாண முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை இரட்னேஸ்வரன் அவர்கள் நேற்று (22.05.2024) புதன்கிழமை அவரது யாழ்ப்பாண இல்லத்தில் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை (பிள்ளையார் விலாஸ் ஸ்தாபகர்) - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானச்சந்திரன் (நீதிபதி மற்றும் முன்னாள் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு) - சரோஜினிதேவி தம்பதியரின் மருமகனும், அமுதினியின் அன்புக் கணவரும், பிரியங்கா, மயூரிப்பிரியா காவியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜய் அபிநந்தன் அவர்களின் பாசமிகு மாமனாரும், இரஞ்சிதமலர், காலஞ்சென்ற யோகேஸ்வரி, செந்தமிழ்ச்செல்வி, காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் வதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராஜா, சிவதாசன், தனஞ்செயன், இரட்ணசோதி, சற்குணேஸ்வரன், சுபோதினி, நளாயினி, ரஜினி, கேதீஸ், அரவிந்தன், சுரேஸ்குமார், விக்னபாலன், சுரேந்திரன், பிரதீபன், ரிஷாந்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, எதிர்வரும் (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளையார் இன் & பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
**021 222 2829, மகள் - 077 722 2716**

தகவல்:
குடும்பத்தினர்.

# தம்புள்ள தண்டர்ஸ்ஸின் உரிமைகள் உடன் இரத்து

கொழும்பு, மே 23

எல்.பி.எல். தொடரில் பங்கேற்கவிருந்த தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமைகள் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று லங்கா பிரிமியர் லீக் அறிவித்துள்ளது.

லங்கா பிரிமியர் லீக் தொடரின் வெளிப்படைத்தன்மை மற்றும் தரத்தைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று எல்.பி.எல். ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் அனில் மோகன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள தண்டர்ஸ் அணியுடன் தொடர்புடைய இம்பீரியல் ஸ்போர்ட்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தமீம் ரஹ்மான் என்பவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். விளையாட்டுத் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துவரும் வழக்கு ஒன்றில் விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடை காரணமாகவே இவர் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

எல்.பி.எல். தொடரில் ஆட்ட நிர்ணய யோசனையை முன்வைக்க முயற்சித்த குற்றச்சாட்டிலேயே தமீம் ரஹ்மான் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தமீம் ரஹ்மானை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமீம் ரஹ்மான் எதிர்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டே தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமைகளை இரத்துச் செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமையை வேறு தரப்பினருக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய உரிமையின் கீழ் தம்புள்ள தண்டர்ஸ் மணி எல்.பி.எல். தொடரில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறும் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, அவுரா லங்கா நிறுவனத்தின் தலைவர் வர்த்தகர் விரஞ்சித் தம்புக்கலவும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இவர், கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். விரஞ்சித் தம்புக்கல தம்புள்ள தண்டர்ஸ் அணியின் முன்னாள் உரிமையாளராவார். (எ-6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 08 . 1936



மறைவு
21 . 05 . 2024

## கிறகோரி யேசுராஜன்

(ஓய்வு நிலை ஆசிரியர், J/St James M.V)

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பங்கைச் சேர்ந்தவரும் இல 60, சென் பெனடிக்ற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிறகோரி யேசுராஜன் நேற்று முன்தினம் (21.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறகோரி - பிரகாசம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகனும், பிரகாசம்மா (தேவமலர்) அவர்களின் பாசமிகு கணவரும், லூர்த்தம்மா (France) வின் அன்புச் சகோதரரும், யூலி ஆன் (ஆசிரியர் J/Sanmarka Vid), கிருபாகரன் (France), யசியானா (ஆசிரியர் J/St Joseph's Vid), பிரபாகரன் (ஆசிரியர், J/Muththuthambi M.V), டெய்சியானா (France), கிறிஸ்ரின் ஜோதினி (DO, உள்ளுராட்சி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாகரன் (ஓய்வுநிலை ISA, RESC வளவாளர், யாழ் வலயம்),கனிஸ்ரெலா (France), காலஞ்சென்ற மரியசந்திரகுமார், சசிக்குமார் (Technical officer), கோஷலானி (DO வலயக்கல்வி அலுவலகம், தீவகம்), பிரபானந்தராசா (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெவ்றி (UK, Birminham University), ஜோயல் (1ம் வருட மாணவன், விவசாயபீடம், அறிவியல் நகர்), புளோரியன் (France) , மக்சிம் (France), கிங்ஸ்ரன் (Trainee, பல்கலைக்கழக கல்லூரி, யாழ்ப்பாணம்), ஸ்ரெபனி (மாணவி - J/Vembadi Girl's High School), டிவைனி (மாணவி - J/Vembadi Girl's High School), டெறிசான் (மாணவன், J/Hindu College), டிவ்யாஞ்சலின் (மாணவி, J/St John's Boscos Vid), டயாந்தினி (France), பிராங்கிளின் (France), நிறோன் (மாணவன், J/Hindu College), மிஷேல் யூடினா (மாணவி, J/St Johns Bosco's Vid) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

நல்லடக்க ஆராதனைகள் நாளை (24.05.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 918 4439
077 662 1654

60, புனித ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.

(CS/55149) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மீதான அடக்குமுறையை வெளிச்சத்துக்கு இட்டுச்செல்க

## வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, மே 23

**இறுதிக்கட்டப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் போராட்டத்துக்குத் தீர்வு கிடைக்க சர்வதேச நாடுகள் சேர்ந்து முன்வரவேண்டும்.**




சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக நீதி வழங்கப்படவேண்டும்.

-இவ்வாறு வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவி யோ. கனகரஞ்சினி நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்மக்களுக்கு நீதி மறுக்கப்பட்ட 15ஆவது வருடத்தில், முள்ளிவாய்க்கால் மண்ணில் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலில் கலந்துகொள்வதற்காக சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலமார்ட் இலங்கைக்கு வந்திருந்தார்.

நினைவேந்தலைப் பார்வையிட்டதும் இங்கு இனப்படுகொலை தான் நடந்தது என்பது அவருக்குப் புரிந்திருக்கும்.

அவரிடம் எங்களை அரசாங்கம் எப்படி அடக்குமுறைக்குட்படுத்துகிறது, விசாரணை செய்கிறது. அச்சுறுத்துகிறது, எங்களின் போராட்டங்களை எவ்வாறு முறியடிக்கிறது என்பதை எடுத்துக்கூறினோம்.

எமக்குரிய தீர்வை சர்வதேசப் பொறிமுறைக்குள் கொண்டுபோய் நீதியைப் பெற்றுத்தரவேண்டும். மீண்டும் மீண்டும் ஆணைக்குழுக்களை உருவாக்கி இலங்கையில் விசாரணைகள் செய்யக்கூடாது- என்றார். (ச-113)

# மே மாதக் கொடுப்பனவு 1000 ரூபாவால் அதிகரிப்பு

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கு ஆயிரம் ரூபா அதிகரிப்புடனான, மே மாதக் கொடுப்பனவுகள் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இம்முறை 2 ஆயிரத்து 900 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் அறி விக்கப்பட்டுள்ளது. (ஒ-25-9)

# களமிறங்கும் பொன்சேகா

கொழும்பு, மே 23

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார் எனப் பொன் சேகாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொன்சேகா எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டுச் சேராமல் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட உள்ளார்.

பொன்சேகா ஊழலற்ற நாட்டை ஊக்குவிப்பதுடன் தேசியப் பாதுகாப் புக்கும் முன்னுரிமை அளிப்பார். அவருடன் புத்திஜீவிகள் மற்றும் முக்கியமான பிரமுகர்கள் பணியாற்றவுள்ளனர்.

பொன்சேகா பல இராஜதந்திரிகளுடன் உத்தியோகபூர்வமற்றகலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ள நிலையில் இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தை பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# பிணையில் டயானா

கொழும்பு, மே 23

போலியான தகவல்களை வழங்கி கடவுச்சீட்டைப் பெற்றுக் கொண்டாரென தொடுக்கப்பட்ட வழக்கில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை சரீரப் பிணையில் விடுவித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில், டயானா கமகே இரட்டைக்குடியுரிமை அந்தஸ்து இல்லாமல் இலங்கையில் வசிக்கும் பிரிட்டன் பிரஜை என்ற முறைப்பாட்டின் பேரில் அவருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் பி அறிக்கையைத் தாக்கல் செய்தது.


இந்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலைசெய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை டயானா கமகே இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுள்ளதால், இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவர் எனத் தெரிவித்து சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் செய்த முறைப்பாட்டுக்கமைய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 05 . 1946

மறைவு 22 . 05 . 2024



### கந்தையா இராஜரத்தினம்

**(ஓய்வு பெற்ற பிரதித் திட்டப் பணிப்பாளர், மன்னார்)**

நவக்கிரியை பிறப்பிடமாகவும், கலைமன்ற வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜரத்தினம் அவர்கள் நேற்று (22.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா - சிவக்கொழுந்து தமம்பதியரின் பாசமிகு புதல்வனும், அமரர் யோகரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் பொன்னம்மா, நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தையா, நாகேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேஸ்வரி, நிமல், திலீபன், சோபிதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2024) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் பிலாவடி வீதி, சம்பளை, பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 03.00 மணிக்கு கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 833 5970

பிலாவடி வீதி, சம்பளை,
பருத்தித்துறை.

(CS 55148) V-

**இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்**
**ஆர்.ஏ.டிமெல் மாவத்த,**
**கொழும்பு 03.**

**தொழில்சார் கல்விக் கருத்தரங்கு**
**மற்றும்**
**தொழில்சார் கற்கை நெறிகளுக்கான**
**அங்குரார்ப்பண மாநாடு -2024**

இடம் : VIP Conference Hall
Tilko City Hotel , Jaffna
திகதி : 26-05-2024 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 10:00am -1.00pm

க.பொ.த. (சா.த) பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் க.பொ.த.(உ.த.) பெறுபேறுகளினை எதிர்பார்க்கும் மாணவர்கள், உயர் கற்கைகளினை தெரிவு செய்யும் மாணவர்கள், Student Visa ஊடாக வெளிநாடு செல்ல விரும்புபவர்கள் கலந்து ஆலோசனைகளினை பெற்றுக் கொள்ளமுடியும்.

பதிவாளர் / நிர்வாகம்
இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்
கொழும்பு / கண்டி / மட்டக்களப்பு / திருகோணமலை / வவுனியா / யாழ்ப்பாணம் / கிளிநொச்சி / முல்லைத்தீவு.

Cont: 074 116 3159, 076 685 2529, 077 465 2439

அனுசரணைகள்:

CS561 (3x20) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளியேறியது ஆர்.சி.பி.

ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடரின் பிளேஒவ் சுற்றின் எலிமினேட்டர் ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றி பெற்றது. இதன்மூலம் ஆர்.சி.பி. அணி தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற நேற்றைய போட்டியில் ஆர்.சி.பி. - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

ஆர்.சி.பி.யின் தொடக்க வீரர்களாக விராட் கோலி டு பிளெஸ்ஸிஸ் களமிறங்கினர். 5 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் டு பிளெஸ்ஸிஸ் 17 ஓட்டங்களுடன் வெளியேறினார். 8ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 33 ஓட்டங்களுடன் கோலி ஆட்டமிழந்தார். அடுத்து கேமரூன் கிரீன் - ரஜத் படிதார் கைகோர்த்து ஆட்டத்தை நகர்த்திச் சென்றனர். 13ஆவது பந்துப்பரிமாற்றத்தில் கேமரூன் 27 ஓட்டங்களுடன் வெளியேற, அவரைத் தொடர்ந்து வந்த மக்ஸ்வெல் அதே ஓவரில் டக் அவுட்டானார்.

ரஜத் படிதாரும் நிலைக்காமல் 34 ஓட்டங்களுடன் பிடி கொடுத்து பவிலியன் திரும்பினார். இறுதியில் மஹிபால் லோமரோர் - தினேஷ் கார்த்திக் நிதானமாக ஆடினர். எனினும் ஆவேஷ் கான் வீசிய 19ஆவது ஓவரில் தினேஷ் கார்த்திக் 11 ஓட்டங்களுடனும், மஹிபால் 32 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்த ஆர்.சி.பி. 172 ஓட்டங்களைச் சேர்த்தது.

173 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஆரம்ப வீரர்களாக யஷஸ்வி ஜெய்ஸ்வால், டாம் கோஹ்லர் ஆடினர். 20 ஓட்டங்களுடன் டாம் கோஹ்லர் நடையை கட்ட, 9 ஆவது பந்துப்பரிமாற்றம்வரை நிதானமாக ஆடிய



யஷஸ்வி 30 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்திருந்தார். கேமரூன் கிரீன் வீசிய பந்தில் தினேஷ் கார்த்திக்கிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து இறங்கிய அணித்தலைவர் சஞ்சு சாம்சன் 17 ஓட்டங்கள், ரியான் பராக் 36 ஓட்டங்கள், துருவ ஜுரேல் 8 ஓட்டங்கள், ஹெட்மயர் 26 ஓட்டங்கள், பவல் 16 ஓட்டங்களைப் பெற 19 பந்துப்பரிமாற்றங்களில் 6 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி 174 ஓட்டங்கள் குவித்து ஆர்.சி.பி. அணியை வீழ்த்தியது.

இந்தத் தோல்வியுடன் ஆர்.சி.பி. அணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வரும் 24ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெறும் தகுதிச் சுற்று 2இல் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை எதிர்த்து விளையாடும். அந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணியே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். (ஏ)

## நினைவேந்தல்களை...

- இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் தெஹிதினிய, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் கடிதம் ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி மட்டக்களப்பு, சேனையூர் புவனேஸ்வரி அம்மன் கோயில் முன்றிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய பல்கலைக்கழக மாணவி கைது செய்யப்பட்டமை தொடர்பாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியுள்ளது. விளக்கம் கோரி அனுப்பியுள்ள கடிதத்திலேயே ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் தெஹிதினிய மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

"சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் பிரகாரம் மரணித்த ஒருவரை நினைவுகூர்வது ஒருவரது அடிப்படை உரிமை. அந்தவகையில் தமிழ் மக்கள் அஞ்சலி ஒன்றுகூடல்களை நடத்துவதற்கு உரித்துடையவர்கள்.

இனரீதியான பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டாத, தேசிய, இன அல்லது மத வெறுப்புணர்வை ஆதரிக்காத செயல்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

எந்தவொரு அமைதியான நினைவேந்தல் நடவடிக்கைகளையும் தடுக்கும் நீதிமன்ற உத்தரவுகளைப் பெறுவதைத் தவிர்க்கவேண்டும் என்று வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரிவுகளில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவேண்டும்.

இந்தக் கடிதத்தின் பிரதிகளை மும்மொழிகளிலும் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்புங்கள்" என்று அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-6)

## சட்டங்களால்...

- இவ்வாறு எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை வங்குரோத்தாக்கிய அரசாங்கத்தால், நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பமுடியாது. அதனால் புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள தற்போதுள்ள அரசாங்கம் வழிவிட வேண்டும்.

அரசாங்கம் 75 புதிய சட்டங்களைக் கொண்டுவந்துள்ளோம் என்று ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார். எத்தனை சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் அவை முறையாகச் செயற்படுத்தப்படுவதில்லை. தற்போதைய பிரதம நீதியரசர் நல்லாட்சிக் காலத்தில் சட்டமா அதிபராக இருந்து 42 வழக்குகளைத் தொடுத்திருந்தார். கோத்தாபயவின் அரசாங்கம் வந்த பின்னர் அந்த வழக்குகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சாதாரண ஊழியர் ஒருவரைத் தாக்கியதை நாங்கள் கண்டோம். தாக்கியதை அவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தார். இதுவரை அவருக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படவில்லை.

அரசாங்கம் தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு செல்வதில்லை. ஏனெனில் அங்கு சென்றால், இவர்களுக்குப் பதிலளிக்கமுடியாது. இரண்டு வருடங்களுக்கு முன்பே இறுதியாகச் சென்றார்கள். அங்கு இலங்கையில் பொருளாதார ஊழல், மோசடி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்களால் அதற்குப் பதிலளிக்க முடியவில்லை. அதன்பின்னர் யாரும் அங்கு செல்லவில்லை.

கோத்தாபய அரசாங்க காலத்தில் பொலிஸில் சரணடைந்த 20 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். பாதுகாப்புக் கருதியே அவர்கள் பொலிஸில் சரணடைகின்றனர் - என்றார். (அ-எ-இ)

## பொலிஸ்...

ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞர்கள் வீதியில் கூடியிருந்தபோது அங்கு வந்த ஒருவர், பொலிஸ் உத்தியோகத்தர் என்று [illegible] அறிமுகப்படுத்தி, அவர்களை அங்கிருந்து [illegible] செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளார். எனினும் இளைஞர்கள் அங்கிருந்து அகலவில்லை. அங்கிருந்து திரும்பிச் சென்ற அந்த நபர் சிறிது நேரத்தில் மீண்டும் அங்கு வாளுடன் வந்து தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படுகின்றது.

இவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்றும், பொன்னாலையைச் சேர்ந்தவர் எனவும் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஆவா குழு தன்னைத் தடுத்து தாக்குதல் நடத்த முற்பட்டது என்று அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரியவருகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான காணொலி ஒன்றும் தாக்குதலுக்கு இலக்கான தரப்பால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-26-125)

## இந்திய...

எந்தத் தீர்வும் வழங்கப்படாத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் வட மாகாணத்துக்கு வரவுள்ளார்.

வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் 50 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சம் மக்கள் சார்பாக அவரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம்.

தற்போதைய ஜனாதிபதி, பிரதமராகப் பதவி வகித்தபோது 2016 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 5 ஆம் திகதி இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு புதுடில்லியில் இணக்கப்பாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்திய மீனவர் அத்துமீறல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

கடந்தமுறை ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்தபோது அவர் வடக்கு மீனவர் பிரதிநிதிகளைச் சந்திக்காமல் சென்றுவிட்டார். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே ஜனாதிபதியிடம் நாங்கள் வலியுறுத்துகின்றாம். தீர்வு அல்லது இது தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகளை வடக்குக்கு வரும் ஜனாதிபதி தெரிவிக்கவேண்டும் - என்றார். (அ-எ-100)

## பொதி...

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதியிலேயே ஹெரோய்ன் போதைப்பொருள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டுள்ளது. பொதியில் அனுப்பப்பட்ட ஆடைக்குள் ஹெரோய்ன் போதைப் பொருள் தைத்து மறைக்கப்பட்டிருந்தது.

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தலைமையில் இயங்கும், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழு போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளது. 3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், 28, 32, 22 ஆகிய வயதுகளை உடைய பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொதியை அனுப்பியவர், பெற்றுக்கொண்டவர், பணம் கொடுத்தவர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண்ணும் மற்றொருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## பிரச்சினைக்குத்...

சம்பள நிலுவைப் பிரச்சினை காணப்படுகின்றது. நிதிதான் பிரச்சினை என்றால் எம்முடன் பேசித் தீர்மானிக்கலாம். 2015 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள 15 வீத சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை. அப்போது ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருந்தார் - என்றனர். (அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்விசாரா ஊழியர்கள்; தொடர்கிறது போராட்டம்

கொழும்பு, மே 23

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தினரால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஊர்வலமாக வந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது 'ஊழியரின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொள்', 'கொடுப்பனவை அதிகரி', 'கல்விசாரா ஊழியர்களை மாற்றான் வீட்டுப் பிள்ளையாக் காதே' போன்ற வாசகங்களை தாங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழில்சங்க கூட்டுக்குழுவினருடன் ஜனநாயக ஊழியர் சங்கத்தினரும் போராட்டத்தில் பங்கேற்றனர். (ச-27)

## ரைசிக்கு அஞ்சலி

கொழும்பு, மே 23

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது சபாநாயகர் உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அமைச்சர்கள் இருக்கையில் இருந்து எழுந்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியதையடுத்து சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின. (ச-இ)

வங்கி மீதி வசதிகள்
மற்றும்
விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/55110) L-1

074 173 7684

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

புதிய பிரிவு ஆரம்பம் - A/L 2026
திகதி : 25.05.2024 (சனிக்கிழமை)
நேரம் : காலை 8.30

| | | |
|---|---|---|
| தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | - | ராகவன் (B.Sc)<br>முருகநிரோஜன் (B.Sc)<br>அச்சுதன் (B.Sc) |
| பொறியியல் | - | அருண்குமார் (B.Tech Hons) (Eng) |
| தொழில்நுட்பவியல் | - | சிவஜன் (NDT, HNDCT)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | - | திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri)<br>பவனீதன் (B.Sc in Agri) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | - | நஜன் (B.Sc)<br>சிவச்செல்வன் (B.IT,MEd)<br>கவாஸ்கர் (B.IT) |
| விவசாய விஞ்ஞானம் | - | சாரங்கன் (B.Sc in Agri)<br>திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri) |
| புவியியல் | - | S.S.கோகில் (B.A,P.G.D.E, M.Ed) |
| ஊடகக் கற்கை | - | கஜிதரன் (B.A) |
| கணிதம் | - | கிரிசாந் |
| சித்திரம் | - | ஜெயந்தன் (BA) |

தொடர்புகளுக்கு: 077 017 5346

## மரண அறிவித்தல்

தோற்றம் 10.09.1989



மறைவு 20.05.2024

### தியாகராயா தயானன்

(Bala Enterprices, Ganeswaram Alaveddy)
சமாதான நீதிவான்)

அளவெட்டி கணேசபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராயா தயானன் 20.05.2024 திங்கட்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் தியாகராயா-பாலரஞ்சினி தம்பதியரின் அன்பு மகனும் கதிரமலை-ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சிந்துஜாவின் (சித்த மருத்துவர் உருத்திரபுரம்) அன்புக் கணவரும் அஸ்வந், அஸ்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி
கணேசபுரம்

(CS 55148) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 10.02.1949



இறப்பு 21.05.2024

### துரைசிங்கம் விக்னேஸ்வரன்

(ஓய்வுநிலை மாவட்ட கடற்தொழிற் திணைக்கள பரிசோதகர்,
கடற் தொழிற் திணைக்களம், யாழ்ப்பாணம்)

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் விக்னேஸ்வரன் ( ஓய்வு நிலை மாவட்ட கடற்தொழிற் திணைக்கள பரிசோதகர், கடற்தொழிற் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று முன்தினம் (21.05.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம்பிள்ளை - திருப்பதிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மிருணாளினியின் பாசமிகு கணவரும், விஜயகாந்த் (சிரேஷ்ட பொறியியலாளர், தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாணம்), விஷ்ணுகாந்த் (கனடா), விஜயதட்சினி (உரிமையாளர் - தட்சா அழகுநிலையம், யாழ்ப்பாணம், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்) அவர்களின் அன்புத் தந்தையாரும், விக்னேஸ்வரலிங்கம், விஜிதா, விதூசினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்னேஷ் (மாணவர்- தரம் 6, யா/இந்துக்கல்லூரி), வர்ஷனா (மாணவி - தரம் 7, யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் குகனேஸ்வரன், த.அம்பிகை, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் - 077 967 8080
மகள் - 077 338 3643

சிவபதி,
சூராவத்தை, சுன்னாகம்.

(CS/55147) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

:021 493 0000 - :021-493 1111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.